# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## 29 - பகுதி II

**1.** தொடர்பாடல் செயன்முறை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றாகும்.

(i) சமூகத்தில் பயன்படுத்தப்படும் **முறைசாராத்** தொடர்பாடல் சங்கிலிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. தனிச்சங்கிலி மாதிரி.
2. புறணி பேசுதல் சங்கிலி மாதிரி /வதந்திச் சங்கிலி.
3. நிகழ்தகவுச் சங்கிலி மாதிரி.
4. கோட்டச் சங்கிலி / கொத்தணிச் சங்கிலி மாதிரி.

**(ஏதாவது இரண்டினைப் பெயரிட்டிருத்தல் வேண்டும்)**

2 × 1 = 2 புள்ளிகள்

**மொத்தப் புள்ளிகள் = 2 புள்ளிகள்**

(ii) ஆட்களிடைத் தொடர்பாடலில் பயன்படுத்தக்கூடிய புதிய ஊடக முறைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. மின்னஞ்சல் (E - mail).
2. சமூக வலைத்தளங்கள் (Facebook, My Space).
3. Skype.
4. ஸ்மாட் கையடக்கத் தொலைபேசியூடாக பயன்படுத்தப்படும் குறுஞ்செய்தி ( SMS), பல்லூடகச் செய்தி (MMS).
5. பிரயோகங்கள் (Apps - Viber, Messenger, Whatsapp, Instagram, Telegram)

**2 x 2 = 4 புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள் = 4 புள்ளிகள்**

**(விபரித்திருந்தால் மாத்திரம் மொத்தப்புள்ளிகள் வழங்குக)**

(iii) வெகுசனத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினைப்** பற்றிக் குறிப்புகள் எழுதுக.

1. முறைசார்ந்து ஒழுங்கமைக்கப்பட்டு, நிறுவன ரீதியில் முன்னெடுக்கப்படுவது.
2. தொழில் சார் ஊடகவியலாளர்களின் பங்கேற்பு காணப்படுதல்.
3. அனைவருக்குமே ஒரே தகவல்கள் பரிமாற்றப்படல்.
4. தொடர்பாடுநருக்கும், பெறுநருக்கும் இடையிலான நெருக்கம் குறைவு.
5. பல்வேறு வாயிற்காப்பாளர்கள் காணப்படுவர்.
6. பின்னூட்டம் தாமதமாகக் காணப்படும் அல்லது கிடைக்கப்பெறாது.
7. உயர் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு காணப்படும்.
8. தொழில்சார் தன்மை காணப்படும்.
9. சிதறியும் பரந்தும் காணப்படும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்ட பெறுநர்கள் காணப்படுவர்.
10. விரைவுத் தன்மை, மற்றும் தொடர்ச்சித் தன்மை காணப்படுதல்.
11. பல்வேறு படிமுறைகள் ஊடாக நிகழப்பெறுதல்.

**பெயரிட்டிருத்தல்** - 1/2 x 4 = 2 **புள்ளிகள்**

**விபரித்தல்** - 2 x 2 = 4 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 6 **புள்ளிகள்**

(iv) வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பண்புகள் **நான்கினை** விவரிக்குக.

எழுத்து அல்லது வாய்மொழி சார் சொற்களின் பயன்பாடு இன்றி நிகழும் தொடர்பாடல் வாய்மொழியல்லாத் தொடர்பாடல் எனப்படும்.

1. குறியீடுகள்.
2. முக அசைவுகள்.
3. விழிவழித் தொடர்பு.
4. வெளித் தோற்றம் (ஆடை அலங்காரம் மற்றும் அணிகலன்கள்).
5. கலை, பண்பாடுகள் சார் பொருட்களின் பயன்பாடு.
6. மொழித் துணை (தொனி, வேகம், ரிதம்).
7. உடல் அசைவுகள்.
8. தொடுகை (ஸ்பரிசம்).
9. வெளி (Space).
10. மௌனம் (Silence).

1. வாய்மொழி சாராத் தொடர்பாடல் ஐம்புலன்களுடன் தொடர்புபட்டது.
2. குறைந்தளவில் அகிலம் சார்ந்தும் (Universal) மற்றும் பெருமளவில் பண்பாடு சார்ந்ததும் (Cultural) அமையப்பெறும்.
3. தனித்தும், வாய்மொழிசார் தொடர்பாடலுடன் சேர்ந்தும் பயன்படுத்தப்படுவது.
4. தொடர்ச்சியானது.
5. பல்வடிவங்களைக் கொண்டது.

**(விவரித்திருந்தால் மாத்திரம் மொத்தப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)**

4 x 2 = 8 **புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள்** = 8 **புள்ளிகள்**

**2.** படைப்பாக்கச் சிந்தனை மூலம், உலகினைத் தனித்தன்மையுடன் நோக்கி மனிதனால் புதிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

(i) வெகுசன ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்யும்போது கவனத்திற் கொள்ளப்படும் 'படைப்பாக்கபூர்வமான வாசிப்புடன்' தொடர்புடைய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

1. ஊடகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களைப் படைப்பாக்க ரீதியில் உள்வாங்கிக் கொள்ளல்.
2. வாசகரின் அனுபவக்களத்துடன் தொடர்புபட்டது.
3. தகவல் ஒன்றின் உட்கருத்தை ஆழமாக கருத்தூன்றி அவதானிப்பது.
4. தகவல் முன்வைப்பிலான உத்திகளின்பால் கவனம் செலுத்துதல்.
5. எவ்வாறான சூழமைவில் (Context) தகவல் முன்வைக்கப்படுகிறது என்பதைக் கருத்திலெடுத்தல்.

(2 x 1 = 2 **புள்ளிகள்)**

(ii) மக்களின் வாழ்வில் நாட்டார் பாடல்கள் முக்கியத்துவம் பெறும் முறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றைப்** பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

1. பொழுதைக் கழிப்பதற்குப் பயன்படல்.
2. தனிமை உணர்வு, களைப்பைத் தணிப்பதற்குப் பயன்படல்.
3. பாரம்பரிய அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கு பயன்படல்.

4. சமூகப் பிரச்சினைகள், முரண்பாடுகளை வெளிப்படுத்தும் களம்.
5. தகவல்கள், அறிவுரைகளை வழங்குவதற்கு.
6. உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு.
7. தொழில்சார் செயற்பாடுகளின்போது ஒருமித்த உணர்வைக் கொண்டு வருவதற்கு (அறுவடைப் பாடல்கள், மீனவர் பாடல்கள் போன்றன) உதவுதல்.
8. வழக்காறுகள், நம்பிக்கைகள், போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கு பயன்படல்.
9. சமூகமயமாதல் செயற்பாட்டிற்கு உதவுதல்.
10. எதிர் / மாற்றுக் கருத்துக்களை தெரிவிக்கும் களமாக அமைதல்.

**பெயரிட்டிருந்தால்** 1/2 x 4 = 2 **புள்ளிகள்**
**விபரித்திருந்தால்** 1 x2 = 2 **புள்ளிகள்**
**மொத்தப்புள்ளிகள்** = **4 புள்ளிகள்**

(iii) படைப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றின் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விவரிக்குக.

1. நோக்கம்.
2. வரவு, செலவுத் திட்டம், வளப்பயன்பாடு.
3. அனுசரணை மற்றும் விசேட அறிவுறுத்தல்கள்.
4. முகம்கொடுத்த பிரச்சினைகள்.
5. பெற்றுக் கொண்ட முன்னேற்றம் .
6. வெற்றி, தோல்விக்குக் காரணமான காரணிகள்.
7. பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள்.
8. செயற்றிட்டத்தில் பங்கேற்ற அங்கத்தவர்கள் மற்றும் அவர்தம் தொடர்புடைய தகவல்கள்.

**(உதாரணங்களுடன் விபரித்திருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக)**
**புள்ளிகள்** 1 1/2 x 4 = 6 **புள்ளிகள்**
**மொத்தப் புள்ளிகள்** = 6 **புள்ளிகள்**

(iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் வெகுசன ஊடகங்களை எவ்வாறு ஒரு கற்றற் கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றி **200** சொற்களுக்குக் குறையாத கட்டுரையொன்று எழுதுக.

(a) மொழியைக் கற்றல் (**100** சொற்கள்)

**கட்டுரை, பின்வரும் விடயங்களைக் கொண்டமையலாம்.**

1. படைப்பாக்க ரீதியான மொழித் தேர்ச்சியை விருத்தி செய்து கொள்ளல்.
2. வெவ்வேறு முன்வைப்பு வடிவங்களை (Presentation Styles) அறிந்து கொள்ளல்.
3. மொழியைச் சரியாக உச்சரிக்கக் கற்றுக் கொள்ளல்.
4. எழுத்திலக்கணம் மற்றும் வசன அமைப்பு முறைகள் பற்றி அறிதல்.
5. காட்சி மொழியினூடாக சுட்டும் பொருட்களை, எழுத்துக்கள் வெளிப்படுத்த முயல்வனவற்றை அறிந்து கொள்ளும் இயலுமை.
6. பொது மொழி (Standard Language) மற்றும் பயன்பாட்டிலுள்ள மொழிகளுக்கிடையலான வேறுபாட்டினை அறிந்து கொள்ளல்.

2 x 2 = 4 **புள்ளிகள்**

(b) சமூகமயமாதல் (100 சொற்கள்)

1. சமூக மதிப்புக்களை அறிந்து கொள்ளல்.
2. தனிநபர் முன்மாதிரிக்களுக்கூடாக சமூகமயமாதலுக்கு உட்படுதல்.
3. சடங்குகள் / சம்பிரதாயங்களை அறிந்து கொள்ளல்.
4. பழக்கவழங்கங்கள் / நம்பிக்கைகளை அறிந்து கொள்ளல்.
5. புதிய போக்குகளை (Trends) அறிந்து கொள்ளல்.
6. புதிய அறிவு, எண்ணங்கள், கருத்தியல்கள் மற்றும் எண்ணக்கருக்களை அறிந்து கொள்ளல்.
7. ஊடகங்களில் முன்வைக்கப்படும் பாத்திரங்களை யதார்த்த வாழ்க்கையில் பின்பற்றுதல்.
8. ஊடகங்களில் காட்டப்படும் கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை தமக்கேற்றாற் போல மாற்றி அவை போலச் செய்தல்.
9. ஊடகங்களில் காட்டப்படும் கதாபாத்திரங்களைப் போல யதார்த்த வாழ்க்கையில் வகிபாகங்களை ஏற்றுக் கொள்ளல்.

**2 x 2 = 4 புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள் = 8 புள்ளிகள்**

**3.** (i) ஊடகப் பண்பாட்டின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. வெகுசன ஊடகங்கள் மூலம் உருவாகும்.
2. தொழில்நுட்பத்தோடு நெருங்கிய தொடர்புடையது.
3. தொடர்மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவது.
4. வணிகமயமானது / வணிக நோக்கத்தை முதன்மையாகக் கொண்டது.
5. பூகோளமயமாதலுடன் நெருங்கிய தொடர்புடையது.
6. யதார்த்தத்திற்குப் பொருந்தாத அல்லது புறம்பான தேவைகள் மற்றும் விருப்பங்களை உருவாக்கவல்லது.
7. பிரசித்த பண்பாட்டைத் தோற்றுவிக்கவல்லது.
8. மானுட நடத்தைகளில் மாற்றங்களைக் ஏற்படுத்துவது.
9. புதிய சமூகத்தை உருவாக்குவது.
10. சமூக, அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளுடன் தொடர்புடையது.

**1/2 x 4 = 2 புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள் = 2 புள்ளிகள்**

(ii) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் செய்தியில் ஏற்படக்கூடிய பாதிப்பினை, அதில் இடம்பெறும் முக்கிய தடைகளின் இரண்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக.

1. ஊடகத் தடை / கருவித்தடை .
2. கருத்துத் தடை / மொழித்தடை .

ஆகியன வெகுசனத் தொடர்பாடலில் ஏற்படக் கூடிய பிரதான இரு தடைகளாகும்.

**ஊடகத்தடை**

வெகுசனத் தொடர்பாடலின் போது தொடர்பாடுநரிடமிருந்து பெறுநருக்கு தகவல் பரிமாற்றப்படும் ஊடகத்தில் ஏற்படும் தடைகள் / இடையூறுகள்.

செய்திப் பத்திரிகை - அச்சு மை கசிவதனால் ஏற்படக்கூடிய இடையூறுகள்.

புகைப்படங்கள் தெளிவற்று இருத்தல்.

வானொலி - அலைவரிசையில் ஏற்படும் இடையூறுகள்.

தொழிநுட்பக் கோளாறினால் ஒலிபரப்புகள் மீள மீள இயக்கப்படுதல்.

தொலைக்காட்சி - தெளிவற்ற காட்சிகள்.

அலைவரிசைக் கோளாறுகள். 2 x 1 = 2 புள்ளிகள்

**மொழித்தடை**

தகவலின் அர்த்தத்தை சரியாக அறிந்து கொள்ள முடியாது போவதால் ஏற்படும் தாக்கம் மொழித்தடை எனப்படும்.

செய்திப் பத்திரிகை - தவறான நிறுத்தற் குறியீடுகள், தவறான பந்தி அமைப்புகள்.

கடின மொழிப் பாவனை.

வானொலி - தகவலை முன்வைக்கும் மொழி வெளிப்பாடு தெளிவற்று இருத்தல்.

உச்சரிப்புப் பிழைகள்.

தொலைக்காட்சி - உச்சரிப்புப் பிழைகள்.

தொழில்நுட்ப / எளிதில் புரியாத சிக்கல் அர்த்தங்களுடனான மொழிப் பயன்பாடு (Technical Language / Jargons).

**2 x 1 = 2 புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள் = 4 புள்ளிகள்**

(iii) செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியர் தலையங்கம் ஏன் முக்கியமானது என்பதற்கு **நான்கு** காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. செய்திப் பத்திரிகையின் நோக்கம் வெளிப்படுத்தப்படல்.
2. சமகாலச் சூழலுடன் சம்பந்தப்பட்டதாக அமைதல் (Timely relevance).
3. மக்களிடம் அவதானத்தைத் தோற்றுவிக்க வேண்டிய கருத்துக்களை முன்வைத்தல்.
4. ஏற்றுக் கொள்ளப்பட்ட / மரபு ரீதியான எழுத்துவடிவங்களைப் பின்பற்றல்.
5. குறித்த ஓர் விடயம் தொடர்பாக ஊடகத்தின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதாக அமைதல்.
6. பொதுமக்கள் அபிப்பிராயங்களை உருவாக்குவதற்கு உதவுதல்.
7. புதிய கருத்துக்களை உருவாக்குவதற்கு உதவுதல்.
8. ஒழுங்கமைக்கப்பட்ட , தர்க்க ரீதியான, காரணிகளுடன் கூடிய ஓர் எழுத்து ஆவணமாக அமையப் பெறல்.

**பெயரிட்டிருத்தல்** = 1/2 x 4 = 2 **புள்ளிகள்**

**விபரித்திருந்தால்** = 2x2 = 4 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 6 **புள்ளிகள்**

(iv) அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து வேறுபட்ட கருத்துரைத்த **நான்கு** மேற்கத்தேய நிபுணர்களைப் பெயரிட்டு, அவர்களில் இருவர் அபிவிருத்தித் தொடர்பில் முன்வைத்த **இரண்டு** விடயங்கள் வீதம் தனித்தனியே விவரிக்குக.

1. வில்பர் ஷ்ராம் - Wilbur Schramm
2. எவரட். எம். றொஜர்ஸ் - Everett M. Rogers
3. டானியல் லேனர் - Daniel Learner
5. லூசியன் பை - Lucian Pye

**பேராசிரியர் வில்பர் ஷ்ராம்**

1. தேசிய அபிவிருத்திக்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்துதல்.
2. தேசியம் குறித்த உணர்வை உறுதிப்படுத்துவதற்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.
3. அரசினால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி இலக்குகள் குறித்து மக்களை அறிவுறுத்துவதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்துதல்.
4. பாரம்பரிய சமூகத்தின் புதிய திறனாற்றல்களை விரிவுபடுத்துவதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்துதல்.
5. பொதுமக்களை இயன்றளவு நிர்வாக வரைமுறைகளுடன் இணைத்துக் கொள்வதற்காக வெகுசன ஊடகத்தை பயன்படுத்தல்.
6. அபிவிருத்தி செயற்பாடுகளில் பொது மக்களது பின்னூட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

**எவரட்.எம்.ரொஜர்ஸ்**

1. அபிவிருத்தி தொடர்பான அறிவை பரப்புவதற்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.
2. மக்கள் தொடர்பாடல் மற்றும் கல்வியூட்டுதலுக்கிடையிலான தொடர்பை நன்றாகப் புரிந்து கொள்ளல்.
3. புதிய உற்பத்திகளை விரிவாக்குதல்.
4. தேசிய நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்.
5. அபிவிருத்தி தொடர்பான பல்வேறு சிக்கல்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு துணை புரிதல்.
6. மக்கள் தொடர்பாடல் மற்றும் தனிநபர் தொடர்பாடல் என்பவற்றுக்கிடையிலான சிறந்த தொடர்பைப் புரிந்து கொள்ளல்.

**டானியல் லேனர்**

மத்திய கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பேறாக டானியல் லேனர் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தார்.

1. நாகரிகமயப்படுத்தல்.
2. விளங்கறிவு.
3. வெகுசன ஊடகப் பாவனை.
4. அரசியல் பங்கேற்பு.

மேலும், எண்ணங்கள், கருத்துக்களை மாற்றும் செயற்பாட்டில் ஆழ்பரிவு ( Empathy) செல்வாக்குச் செலுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

**லூசியன் பை**

ஓர் சிக்கலான சமூக அமைப்பில் தனிநபர் கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகியன வெகுசன ஊடகங்கள் மூலம் நிகழும் என லூசியன் பை குறிப்பிட்டார். இதன் மூலமாக தொடர்பாடல் செயற்பாடு மற்றும் அரசியல் செயற்பாடு ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்பை அவர் ஆராய்ந்தார். வெகுசன ஊடகங்கள் மூலம் தகவல் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசியல் பற்றிய அறிவை பெற்றுக் கொள்ள இயலுதல் இதன் விசேட இயல்பாகும்.

| | | |
|---|---|---|
| **பெயரிட்டிருந்தால்** | = 1/2 x 4 | = 2 **புள்ளிகள்** |
| **01. விபரித்தல்** | = 1 1/2 x2 | = 3 **புள்ளிகள்** |
| **02. விபரித்தல்** | = 1 1/2 x2 | = 3 **புள்ளிகள்** |
| **மொத்தப்புள்ளிகள்** | | = 8 **புள்ளிகள்** |

**4.** (i) எண்மான (டிஜிட்டல்) அச்சிடலின் **இரண்டு** முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.

1. துரிதமாக மேற்கொள்ளப்படக் கூடியது.
2. உயர்தரத்துடன் கூடியது.
3. ஒப்பீட்டளவில் அதிகம் கவருந்தன்மையானது.
4. நிறம் / அல்லது கறுப்பு / வெள்ளைப் பயன்பாடு.
5. வெவ்வேறு அளவுகளில் (size) அச்சிட முடியும்.
6. எண்மான அச்சிடல் மூலம் கடதாசி, றெக்சின் துணி, அட்டை என வெவ்வேறு பரப்புகளிலும் அச்சிட முடியும்.

**பெயரிட்டிருந்தால்** = 1x2 = 2 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 2 **புள்ளிகள்**

(ii) பூகோளமய ஊடகத்தில் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மையைக் காட்டும் விடயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. மேற்கத்தேய கருத்துக்களின் ஆதிக்கம் காணப்படும்.
2. பண்பாட்டுச் சுற்றோட்டத்தில் ஒரு வழிப்போக்கே காணப்படும்.
3. மேற்கத்தேயமல்லாத ( ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க ) நாடுகளின் பண்பாட்டுப் பெறுதிகள் மதிப்பிற் கொள்ளப்படாமை.
4. மேற்கத்தேயம் சார்ந்த நடத்தைகளை, பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்.
5. ஊடகப் பண்பாட்டு வழிமுறைகளைத் தீர்மானிப்பதில் மேற்கத்தேயமயமாக்கலை ( Westernization ) அடிப்படையாகக் கொள்ளல்.

2 x 2 = 4 **புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள்= 04 புள்ளிகள்**

(iii) பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் புகைப்படவியல் பயன்படுத்தக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

1. அச்சு ஊடகங்களில் பயன்படுத்தல் (சுவரொட்டி, துண்டுப்பிரசுரம், பத்திரிகை, சஞ்சிகை, கையேடு)
2. புகைப்படக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்தல்.
3. ஊடக அறிவித்தல்களுடன் புகைப்படங்களை வெளியிடல்.
4. நாட்காட்டிகளில் புகைப்படங்களைப் பயன்படுத்துதல்.
5. விசாலப்படுத்தி (பெரிதாக்கி) பொது இடங்களில் / பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தல்.
6. இணையத்தளங்களில் புகைப்படங்களை வெளியிடுதல்.
7. சமூகவலைத்தளங்களில் புகைப்படங்களை வெளியிடுதல்.

**பெயரிட்டிருந்தால்** = 1/2 x 4 = 2 **புள்ளிகள்**

**விபரித்திருந்தால்** = 2x2 = 4 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 6 **புள்ளிகள்**

(iv) தற்போதைய வெகுசன ஊடகச் செயன்முறையில் தணிக்கை பிரயோகப்படுத்தப்படும் **நான்கு** வழிகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

1. தனிப்பட்ட நபர்களின் பெயர், விபரங்களை பகிரங்கமாக எடுத்துக் கூறுவதன் மூலம் முறைசாரா கட்டுப்பாட்டை உருவாக்க முயற்சித்தல்.
2. விளம்பரங்களை மட்டுப்படுத்தல்.
3. ஊடகங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல், தடைசெய்தல், உரிமங்களைக் கைமாற்றுதல்.
4. வரி அறவிடுதல்.
5. தகுதிவாய்ந்த / தன்னாட்சி அதிகாரியை நியமித்தல்.
6. பரிசில்கள் வழங்குதல், அனுசரணை வழங்குதல்.
7. தண்டனை வழங்குதல்.
8. தண்டப்பணம் அறவிடுதல்.
9. ஊடகவியலாளர்களைத் தாக்குதல், மிரட்டுதல், உயிர்ச்சேதம் விளைவித்தல்.
10. பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்.
11. தடை செய்தல் (பகுதியளவில் / முழுமையாக).
12. ஊடக நிறுவனங்களுக்கு சேதம் விளைவித்தல், தீ மூட்டுதல்.

**(உதாரணங்களுடன் விபரித்திருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும்)**

4 x 2 = 8 **புள்ளிகள்**

**மொத்தப் புள்ளிகள்** = 8 **புள்ளிகள்**

**5.** (i) "பண்பாடு என்பது பல கூறுகளின் ஒன்றிணைவாகும்." மானுடவியலாளர் மாலினோவுஸ்க்கியின் கருத்து விளக்கத்தின்படி பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள் **நான்கினைப்** பெயரிடுக.

1. உபகரணங்கள்.
2. நுகர்வுப் பொருட்கள்.
3. பல்வேறு சமூகக் குழுக்களின் கட்டமைப்பு இயல்புகள்.
4. மானுட எண்ணங்கள்.
5. நுட்பங்கள்.
6. நம்பிக்கைகள்.
7. சடங்குகள்.

**பெயரிட்டிருந்தால்** = 1/2 x 4 = 2 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 2 **புள்ளிகள்**

(ii) "பண்பாட்டில் இடம்பெறும் பல்வேறு மாற்றங்கள் பண்பாட்டு அதிர்விற்குக் காரணமாகின்றன." பண்பாட்டு அதிர்வில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

1. எதிர்ப் பண்பாடுகள் காணப்படுதல்.
2. ஒரு பண்பாட்டின் மதிப்பும் கௌரவமும் வேறு பண்பாட்டினைப் பயன்படுத்தித் தாழ்த்தப்படுதல்.
3. புதிய பண்பாட்டு அம்சங்களை ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளும் அதே வேளை மற்றொருசாரார் ஏற்றுக் கொள்ளாமை.
4. சமூக சம்பிரதாயங்கள் கடுமையானதாக இருத்தலால் மாற்றங்களை நெகிழ்வோடு ஏற்றுக் கொள்ளாதிருத்தல்.
5. ஒரு பண்பாட்டிலிருந்து ஒத்திசைவில்லாத பதிய பண்பாட்டுச் சூழலுக்கு மாறுதல்.

**விபரித்திருந்தால்** = 2 x 2 = 4 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 4 **புள்ளிகள்**

**6.** மொழி, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட அதி சிறப்புவாய்ந்த ஒரு கருவியாகும்.

(i) மொழியைப் பயன்படுத்தி உளக் காட்சிகளை உருவாக்கக்கூடிய ஒருவரது ஆற்றலை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப்படும் பதத்தினைப் பெயரிடுக.

கற்பனையாக்கம் / படைப்பாக்கம்

2 x 1 = 2 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 2 **புள்ளிகள்**

(ii) "வாழும் மொழிகள் தமக்கேயுரித்தான தனித்துவப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன." அவ்வாறான பண்புகள் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. அன்றாடத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படுத்தக் கூடிய மொழி.
2. தொடர்ந்து ஊட்டம் பெறுவதுடன் மாற்றங்களையும் உள்வாங்கும் மொழி
3. தொடர்ச்சியாகப் பயன்பாட்டிலிருக்கும் மொழி.
4. உரிய மக்களால் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய மொழி.
5. படைப்பாக்க ரீதியில் கருத்துக்களை தெரிவிக்கக்கூடிய மொழி.
6. சொற்களின் கருத்தானது சந்தர்ப்பங்களுக்கேற்ப அர்த்தங்களைப் பெறக்கூடிய தன்மை.
7. சொற்களுக்கு புதிய அர்த்தங்கள் தோற்றம் பெறல்.
8. எந்த ஒரு மொழிப்பயன்பாட்டு விதத்திலும் பயன்படுத்தக் கூடிய மொழி ( பேச்சு, ஆற்றுகை, உரை, விபரணம், பிரதியாக்கம்).
9. உயிர்ப்புத் தன்மையுடன் காணப்படும் மொழி.

1 x 4 = 4 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள்** = 4 **புள்ளிகள்**

(iii) வெகுசன ஊடகங்களில் மொழிப் பயன்பாட்டுக்கான வரையறைகள் காணக்கிடைக்கின்றன. செய்திப் பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்துகின்ற அத்தகைய வரையறைகள் தலா **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

**பத்திரிகையில் காணப்படக் கூடிய மொழி வரையறைகள்**

1. உப மொழி / துணை மொழி பயன்படுத்தப்பட முடியாமை.
2. மேல்வர்க்க / உயர்குடி மொழி பயன்படுத்தப்பட முடியாமை.
3. பிரதேச மொழி பயன்படுத்தப்பட முடியாமை.
4. கருத்துக்களை மிகவும் தெளிவாக முன்வைக்க புகைப்படங்களை, காட்சிவழித் துணையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுதல்.
5. ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழி தவிர்ந்த வேற்று மொழிப்பயன்பாடு இன்மை.
6. பெறுநரின் அவசியம் மற்றும் இரசனை என்பன மொழியில் தாக்கத்தைச் செலுத்துதல்.
7. பண்பாட்டு மட்டுப்பாடுகளினால் மொழியைக் கவனமாகக் கையாள வேண்டிய நிலை.
8. தரப்பட்ட வெளிக்கேற்ப (Space) மொழியைப் பயன்படுத்தும் வரையறை.

**1 x 3 = 3** புள்ளிகள்

**வானொலியில் காணப்படக் கூடிய மொழி வரையறைகள்**

1. ஒலிபரப்பு நேரத்திற்கேற்ப மொழிப் பயன்பாடு மட்டுப்படுத்தப்படுகின்றமை.
2. எளிமையான, உசிதமான மொழியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றமை.
3. சிக்கலான கருத்துக்களை முன்வைப்பது கடினமாகக் காணப்படுகின்றமை.
4. எண்சார் பெறுமானங்களைச் சரியாகக் குறிப்பிட முடியாமை (மட்டம் தட்டிக் குறிப்பிடல்)

5. ஒத்த கருத்து தரும் இரண்டு சொற்களை அடுத்தடுத்துப் பயன்படுத்த முடியாமை.
6. உபமொழி / துணை மொழிப் பயன்பாட்டு இன்மை.
7. பண்பாட்டு மட்டுப்பாடுகளினால் மொழியைக் கவனமாகக் கையாள வேண்டிய நிலை.

1 x 3 = 3 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள் = 6 புள்ளிகள்**

(iv) புதிய ஊடகப் பயன்பாட்டில் காணக்கிடைக்கின்ற மொழிரீதியான போக்குகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக.

1. பல்வேறு குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளைப் பயன்படுத்துதல்.
2. கலப்புமொழிப் பயன்பாடு.
3. சுருக்க மொழிப் பாவனை.
4. மரபில் இருந்தும் இலக்கணங்களிலிருந்தும் விலகி மொழியைப் பயன்படுத்தல்.
5. சுதேச மொழியை ஆங்கில எழுத்துக்களில் எழுதுதல்.
6. இமோஜி, ஸ்டிக்கர்ஸ் என்பவற்றைப் பயன்படுத்தல்.
7. பேச்சு மொழிப் பாவனை.
8. விசேட குறியீடுகள் பயன்படுத்தல்.
9. உள்ளூர் மொழிகளில் பொருத்தமான பிரயோகங்கள் அல்லது மென் பொருட்களைப் பயன்படுத்தல்.

**(உதாரணங்கள் குறிப்பிட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக)**

2 x 4 = 8 **புள்ளிகள்**

**மொத்தப்புள்ளிகள் = 8 புள்ளிகள்**

**7.** (i) 'அபிவிருத்தி' தொடர்பிலான வரைவிலக்கணத்தில் டட்லி சியர்ஸ் முன்னிலைப்படுத்திய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

வறுமை, அறிவு ஞானத்தின் கீழ் மட்டம், தொழிலின்மை மற்றும் சமூக சமமின்மை போன்ற துன்பங்களில் இருந்து அபிவிருத்தி அடையும் நாடுகளின் மக்களை மீட்டல்.

1/2 x 4 = 2 **புள்ளிகள்**

(ii) அபிவிருத்தித் தொடர்பாடலில் பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவது பற்றிய பொருத்தப்பாட்டினை **இரண்டு** விடயங்களைப் பயன்படுத்தி விளக்குக.

1. பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான ஊடகம்.
2. நம்பிக்கைத் தன்மை உறுதிப்படுத்தப்படல்.
3. பொதுமக்களுக்குப் பழக்கமான மற்றும் நெருக்கமான குறியீடுகள், சமிக்ஞைகள் காணப்படல்.
4. செயற்படு பெறுநர்கள் காணப்படுவர்.
5. நாட்டார் மக்களுக்குரிய ஊடகமாக அமைதல்.
6. நாட்டார் மக்கள் மத்தியில் தூண்டலை ஏற்படுத்தக் கூடியதாயிருத்தல்.
7. குறைந்த செலவீனம் காணப்படும்.
8. மகிழ்வூட்டல் அம்சங்கள் காணப்படுவதால் பெறுநர்களை இலகுவில் கவரலாம்.

**2 x 2 = 4 புள்ளிகள்**

